# பழங்காசு

சிறப்பாசிரியர் :
வரலாற்று வித்தகர் ம. இராசசேகர தங்கமணி

திருவள்ளுவர் ஆண்டு 2032 மேழம் (சித்திரை) திங்கள் (ஏப்ரல் 2001)

பேழை : 1 (இதழ் எண் : 2) காசு : 2



தமிழகத்தில் கிடைத்த
கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் கிரேக்கக் காசு



பிட்சாடனர்-சோழமாதேவி கோவில் சிற்பம்
சோழப்பெருவேந்தர் காலம்

ஆசிரியர்
மரு. சுசீலாதேவி சீனிவாசன்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# பழங்காசு

நாணயவியல், வரலாற்றியல் காலாண்டிதழ்

பேழை : 1 மேழம் (சித்திரை) தி.பி. 2032 ஏப்ரல் 2001 காசு : 2

## இருபெரும் துயரங்கள்

நண்பர்களுக்குத் தோழமை வணக்கங்கள். மூன்று திங்களுக்குப் பிறகு நாம் மீண்டும் சந்திக்கிறோம். பழங்காசு வெளியீட்டு விழா (28.1.2001) அன்று மாலை 4.30 மணி அளவில் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த நேரத்தில்தான் குஜராத் பூகம்பச் செய்தி இடிபோல் தாக்கியது. நமது சகோதர சகோதரிகளும் அவர்தம் மழலைச் செல்வங்களும், பூமித்தாய் மடியில் புதையுண்டு போனதைக் கேட்டு ஆறாத் துயரடைந்தோம். எத்தனையோ இயற்கைச் சீற்றங்களை எதிர்த்து நின்ற வரலாற்றுச் சின்னங்கள் இன்று மண்ணுக்கடியில் மறைந்த வரலாறாய்ப்போனது. அவ்வாறே வரலாறாய்ப்போன குஜராத் மக்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்திய பின்பே, வரலாற்றிதழ் **பழங்காசு** அன்று வெளியிடப்பட்டது.

குஜராத்தில் நிகழ்ந்த அழிவுகள் இயற்கையானது என்றால், நமது அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற அழிவுகளோ செயற்கையானவை. கனிஷ்கர் காலத்திய வரலாற்றுச் சின்னங்கள், பாமியானின் மிகப் பெரிய அமைதி தவழும் புத்தர் திருவுருவங்கள் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானின் வரலாறே தகர்த்து நொறுக்கப்பட்டது என்பதை தாலிபன் அரசு உணரவில்லை. கடந்த பல நூற்றாண்டுகளாக எத்தனையெத்தனை அரச மரபுகள் மாறி மாறி, அந்த நாட்டில், தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியபோதிலும் இப்படிப்பட்டதொரு அழிவுச் செயலை அவ்வரசுகள் எதுவுமே செய்யத் துணியவில்லை. உலக நாடுகளின் வேண்டுகோளையும், அனைத்து நாடுகளின் கல்வி, அறிவியல், கலைக் கழகத்தின் (யுனஸ்கோவின்) மன்றாடலையும் சிறிதும் பொருட்படுத்தாது, தாலிபன் அரசின் இச்செயல்பாடு, நாம் 21–ஆம் நூற்றாண்டில்தான் வாழ்கிறோமா என்ற ஐயப்பாட்டையே தோற்றுவித்துவிட்டது.

சில நிமிடங்களுக்குள் தூள்தூளாக்கப்பட்ட இப்பிரமாண்டமான புத்தர் திருஉருவங்களை, மீண்டும் தங்களால் உருவாக்க இயலுமா என்பதை, தாலிபன் அரசும், அவ்வரசின் இவ்வழிவுச் செயலை ஆதரிப்பவர்களும், சிறிதாவது சிந்தித்துப் பார்க்கட்டும்.

இம்மாபெரும் வரலாற்றுச் சின்னங்களை இன்றைய ஆப்கன் ஆட்சியாளர்கள் அழித்தாலும், ஆப்கானிஸ்தானின் பண்டைய வரலாற்றையே அழித்துவிட முடியுமா என்பதே நமது கேள்வி! எதிர்கால ஆப்கானிஸ்தான் வரலாற்றில் தாலிபன் அரசின் இவ்வழிவுச் செயல், மிகப்பெரிய கரும்புள்ளியாகவே விளங்கப் போவது உறுதி.

இவ்விரு பெரும் துயரங்களுக்காக, எமது ஆழ்ந்த வருத்தத்தைப் பழங்காசின் நண்பர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

15.4.2001 அன்புடன்

திருச்சிராப்பள்ளி–19. சுசீலாதேவி சீனிவாசன்

த.கி.ச. உறுப்பிதழ் : 264/2001

TASNA Regd. No. 264/2001

கட்டுரைகள் அனைத்தும் அவற்றின் படைப்பாளர்களுக்கே உரிமையுடையவை.

பழங்காசு மின்னஞ்சல் (E-mail) : pazhangasu@usa.net
pazhangasu@yahoo.com

ஓரிதழ் நன்கொடை : உரூ. 15/- (சுற்றுக்கு மட்டும்)

# வாழ்க மணமக்கள்!



வரலாற்று ஆர்வலரும்
பழங்காசின் ஆதரவாளருமான
மணமகன்
**மு. இராசா**வுக்கும்
(பி. முத்துசாமி – நல்லம்மாள்
தம்பதியரின் செல்வ மகன்)



மணமகள்
**பா. மாலதி**க்கும்
(கே. பாலன் – பாப்பு
தம்பதியரின் செல்வ மகள்)

9.3.2001ல் நாமக்கல்லில் நடைபெற்ற திருமணத்திற்கு பழங்காசின் சிறப்பாசிரியர் வரலாற்று வித்தகர் பேரா. ம. இராசசேகர தங்கமணி அவர்களும், அறிவுரைஞர்கள் ஈரோடு பேரா. க.ஆ. திருஞானசம்பந்தம் மற்றும் திருச்சிராப்பள்ளி ப. சீனிவாசன் அவர்களும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். இத்திருமணத்தை முன்னிட்டு மணமகன் மு. இராசா அவர்களால் பழங்காசின் வளர்ச்சி நிதிக்காக ரூ.1000/- நன்கொடையளிக்கப்பட்டது. மணமக்களுக்கு பழங்காசின் வாழ்த்துக்கள்.

அச்சிட்டோர் : சிரியா ஸ்கிரீன்ஸ், திருச்சி-8.